# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ'— இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

---

*(1998, யூன் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1998, யூன் மாதம் 19 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 5.25 தபாற் செலவு: ரூபா 2.50

**1998 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ'— இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்**

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 54/92

**1980 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ'— இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்ட 306 'அ' இன் ஒரு பகுதி, புதிய அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'இ' இன் ஒரு பகுதியாக வந்துள்ளதாலும்:

அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' — இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது, சொல்லப்பட்ட இளைஞர் நம்பிக்கைப்பொறுப்பு அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டங்கள் 306 'அ' மற்றும் 306 'இ' என்பவற்றினால் இணைந்து நிருவகிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளதாதலாலும் :

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' — இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' — இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அதற்கான (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

2-டீ 041810- 1,100 (96/09)

"(2) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கை அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' ஆளுநர் அத்துடன் இலங்கை அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'இ' மாவட்ட ஆளுநர் ;

(ஆ) அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' இன் தற்போதையவருக்கு உடன் முன்னிருந்த மாவட்ட ஆளுநர் அத்துடன் அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'இ' இன் தற்போதையவருக்கு உடன் முன்னிருந்த மாவட்ட ஆளுநர் ;

(இ) அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' இன் மாவட்ட அவைச் செயலாளர் அத்துடன் அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'இ' இன் மாவட்ட அவைச் செயலாளர் ;

(ஈ) அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' இன் மாவட்ட அவைப் பொருளாளர் அத்துடன் அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'இ' இன் மாவட்ட அவைப் பொருளாளர் ;

(உ) சொல்லப்பட்ட மாவட்ட ஆளுநரினால் நியமிக்கப்படவேண்டிய அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' இலுள்ள சிங்கக் களரியிலிருந்து உறுப்பினர் ஒருவர் அத்துடன் சொல்லப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆளுநரினால் நியமிக்கப்பட வேண்டிய அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'இ' இலுள்ள சிங்கக் களரியிலிருந்து உறுப்பினர் ஒருவர் ;

(ஊ) மாவட்ட அவையின் விதப்புரையின் பேரில் சொல்லப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆளுநரினால் நியமிக்கப்படவேண்டிய அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' இலுள்ள சிங்கக் களரியிலிருந்து உறுப்பினர் ஒருவர், அத்துடன் மாவட்ட அவையின் விதப்புரையின்பேரில், சொல்லப் பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆளுநரினால் நியமிக்கப்பட வேண்டிய அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'இ' இலிருந்து அந்தந்த மாவட்ட ஆளுநரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(எ) அனைத்துலக சிங்கக் களரிகள் 306 'அ' இலிருந்தும் அனைத்துலக சிங்கக் களரிகள் 306 'இ' இலிருந்தும் அந்த மாவட்ட ஆளுநரினால் நியமிக்கப்பட்ட கடந்த கால ஆளுநர் இருவர்.".

*முதன்மைச் சட்ட வாக்கத்திற்கான பொதுவான திருத்தங்கள்.*

3. சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது முதன்மைச் சட்டவாக் கத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விதியில், அறிவித்தலில் அல்லது பிற ஆவணத்தில் அனைத் துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'இ' இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப் பொறுப்பு என்பது (அப்பெயரினால் அல்லது "நம்பிக்கைப் பொறுப்பு" என்பதன் குறுக்கத்தினால்) குறிப்பிடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் "அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டங்கள் 306 'அ' — இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப்பொறுப்பு" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' மற்றும் 306 'இ' — இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற் றுக்கான நம்பிக்கைப்பொறுப்பு" என்னும் சொல்லமைப்பு இடப்படல் வேண்டும்.

ஒப்பந்தங்கள் முதலியவற்றுக்கான பேணல்கள்.

4. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன் "அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டம் 306 'அ' – இளைஞர் கல்வி, புனர்வாழ்வு மற்றும் வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப் பொறுப்பு" மூலம் அல்லது அதன் சார்பில் எத்தன்மைத்தாயும் செய்யப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கை, ஒப்பந்தம் அல்லது பிற சாதனம் அல்லது ஆவணம் ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து அல்லது அதற்குப்பின் "அனைத்துலக சிங்கக் களரிகள் மாவட்டங்கள் 306 'அ' மற்றும் 306 . 'இ' – இளைஞர் கல்வி, புனர்வாழ்வு, வேலைக்கமர்த்தல் ஆகியவற்றுக்கான நம்பிக்கைப்பொறுப்பு" என்பதனால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்டதாகவும் வழங்கப்பட்டதாகவும் அல்லது நிறைவேற்றப்பட்டதாகவும் கருதப்படல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.